# நீதி இலக்கியங்களில் மனிதநேயம்

# Humanism in Justice Literature

[1]தினேஷ்குமார் பா. [2]மஹேஸ்வரி.பே

[1]முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001.

[2]தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001.

**[1]Dineshkumar B [2]Maheswari.P**

[1]Ph.D Research scholar, Department of Tamil, Nallamuthu gounder Mahalingam College, Pollachi- 642001.

[2]Department of Tamil, Nallamuthu gounder Mahalingam College, Pollachi-642001.

[1]ORCID:https://orcid.org/0009-0007-1970-7830

[2]ORCID: https://orcid.org/0009-0000-1032-4971

DOI: 10.5281/zenodo.14653328

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககாலத்தைத் தொடர்ந்துவந்த சங்கம் மருவிய காலகட்டத்தில் சேர, சோழ, பாண்டியர் அல்லாத களப்பிரர்களின் ஆட்சி செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது. இவர்கள் வாழ்ந்த காலகட்டம் வரலாற்று ஆய்வாளர்களால் இருண்டகாலம் எனப்படுகிறது. இக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் சிலர் எவ்வாறு வாழவேண்டும் என்ற புரிதல் இன்றி வாழ்ந்தனர். மற்ற உயிர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்காக மனம் வருந்தியும், பிரர் துன்பத்தைப் போக்கியும், வாழும் இரக்கத்தன்மை கொண்ட மக்கள் உள்ளத்தில் இருக்கவேண்டியது மனிதனேயப் பண்பு ஆகும்.

மனிதன் என்பவர், மனிதர்கள் மற்றும் பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு மனம் வருந்துபவராகவும், அத்துன்பத்திலிருந்து உயிர்களை விடுவிப்பவராகவும் திகழவேண்டும். மனிதநேய பண்பில் உயர்ந்தவராக வள்ளலார் திகழ்கிறார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடுகையில் ஓரறிவுடைய பயிர் வாடியதைக்கண்டு மனம்உருகி அதற்காக வருத்தப்படுகிறார். சான்றோர்கள் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் பொறுமை, ஈகை, கல்வி, ஒழுக்கம், துறவு, கொல்லாமை, வாழ்வியல், தனிமனித மேம்பாடு, அரசர்க்காண கடமைகள் போன்ற பல்வேறு

வகைப்பட்ட நல்ல அறச்சிந்தனைகள் பொதிந்த பதினெண்கீழ்க் கணக்கு நீதிநூல்கள் படைத்தனர். இந்நூல்களுள் காணப்படும் மனிதநேய பண்புகளை அன்புடைமை, ஈகை மற்றும் கொல்லாமை ஆகிய தலைப்புகளில் ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

Abstract

The Sangam period that followed the Sangam Maruviya period saw the influence of the Chola and non-Pandyan feudal lords. The period in which they lived is called the Dark Ages by historians. Some of the people who lived in this period lived without understanding how to live. It is a human trait to have compassion in the heart of people who feel sorry for the sufferings caused to other beings, relieve the suffering of others. A human being should be a person who feels sorry for the suffering caused to humans and other living beings and should be freed from that suffering. Vallalar is the highest in human nature. Whenever he sees a withered crop, he sings that he has withered. In order to lead the people in good manners, the scholars who are special in virtues have published eighteen books of Proverbs containing various types of good moral thoughts such as patience, kindness, education, discipline, asceticism, non-killing, lifestyle, personal development, royal duties etc. This thesis examines the humanistic characteristics found in these books on the topics of love, kindness and killing.

**Keywords**: Love, kindness, environment, Hungry, அன்பு, இரக்கம், சூழல், பசி.

**முன்னுரை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள பதினோரு அறநூல்களிலும் மனிதவாழ்விற்குத் தேவையான வாழ்வியல் சிந்தனைகள் பற்பல நிறைந்துள்ளன, அவற்றுள் மனிதநேய பண்புகள் நிறைந்திருக்கும் அன்புடைமை, ஈகை மற்றும் கொல்லாமை முதலிய தலைப்புகளில், மனிதன் மற்ற உயிர்களிடத்தில் அன்புசெலுத்தி, அவற்றைப் பாதுகாக்கவேண்டியதன் வழிமுறைகளையும், பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**மனிதநேயம் - சொல் விளக்கம்**

மனிதநேயம் என்ற சொல்லிற்குச் சமூகரீதியில் சகமனிதன்மீது கொள்ளும் அன்பு, மதிப்பு போன்றவை என்று (கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப.109) விளக்கம் தருகிறது. மேலும், ஒரே பகுப்பாகக் கருதப்படும் உலக மக்கள் அனைவருக்குமான தொகுதியும், இரக்கமும், ஒத்துணர்வும் ஆகிய மனிதப்பண்பு, மனிதத்தன்மை, மனிதநேயம் என்று (ஆக்ஸ்போர்டு ஆங்கிலத் தமிழ் அகராதி ப.75) விளக்கம் தந்துள்ளது.

**மனிதநேயம்**

மனிதன் என்பவர், மனிதர்கள் மற்றும் பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டு மனம் வருந்துபவராகவும், அத்துன்பத்திலிருந்து உயிர்களை விடுவிப்பவராகவும் திகழவேண்டும். மேலும் யாதொருஉயிரினையும் எவ்வகையிலும், துன்புறுத்தாமலும், கொலை புரியாமலும், கொலையுண்ட மாமிசத்தை உண்ணாதவராகவும், அன்பின் வடிவானவராகவும், உதவும் மனப்பான்மை உடையவராகவும் வாழ்பவர் உயர்ந்த மனிதநேய பண்பினைப் பெற்றவராவார்.

மனிதநேய பண்பில் உயர்ந்தவராக வள்ளலார் திகழ்கிறார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடுகையில் ஓரறிவுடைய பயிர் வாடியதைக்கண்டு மனம்உருகி அதற்காக வருத்தப்படுகிறார். ஏழை மக்கள் பசியால் துன்பப்படுவதைக் கண்டவர், இதனைப் போக்க வடலூரில் சத்திய தருமச்சாலை ஒன்றை நிறுவி மக்களின் பசித்துன்பத்தை இன்றுவரைப் போக்கிவரும் உயர்ந்த பண்பாளராகத் திகழ்கின்றார்.

**ஆறறிவதுவே அவற்றொடு மனனே**

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல்காப்பியம்- பொருள்.நூ.571)**

என்ற தொல்காப்பியரின் கூற்றுப்படி மனிதன் நன்மை, தீமை முதலியவற்றைப் பிரித்தறியும் உயர்ந்த மனம் என்னும் பண்பினைப் பெற்றுள்ளான், இதனைப் பயன்படுத்திப் பிற உயிர்களின் துன்பத்தினைப் போக்குபவனாக மனிதன் செயல்படுவானேயானால் மனிதநேயம் கொண்ட மனிதனாக வாழமுடியும்.

**அன்புடைமை**

பிறமனிதர் மற்றும் பிறஉயிர்கள் துன்புறுவதைக்கண்டு மனம் வருந்தி, அத்துன்பத்திலிருந்து அவ்வுயிர்களை விடுவிக்க உதவ வேண்டும் என்ற எண்ணமே அன்பின் துவக்கமாகும். இரக்கம், கருணை, உயிர்நேயம், பாசம் முதலிய பலவகைப்பட்ட மேம்பட்டப்பண்புகளின் சேர்க்கையாக அன்பு என்ற சொல் உள்ளது. பிறருக்கு உதவவேண்டும் என்னும் அன்பு மனிதனிடம் இருக்கும் வரையில் மனிதனிடம் இருக்கும் மனிதநேயப்பண்பு அவனை விட்டுச் செல்லாது. இன்பதனை,

**அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்**

**கென்போ டியைந்த தொடர்பு. (திருக்குறள்-73)**

என்ற குறளில், உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது உள்ளத்துள் உயர்ந்த அன்பைப் பெற்றுள்ளதனால் ஏற்படும் விளைவு. என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க மனிதனிடம் இருக்கவேண்டிய மனிநேயத்தில், அன்பு என்ற பண்பைப்பற்றிக் காண்பதாக இப்பகுதி அமைகிறது.

மனிதன் தம்மைச்சூழ்ந்துள்ள சமூகத்தின் ஓர் அங்கமாக நாய், யானை, பசு, ஆடு, பூனை போன்ற விலங்கினங்களையும், சக மனிதர்களையும் சார்ந்து வாழ்கிறான். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்துவருவதால், தம்மைச்சார்ந்துள்ள மற்ற விலங்குகளிடம் மிகுந்த அன்பு கொண்டவர்களாக மனிதன் திகழவேண்டும். மனிதன் பிற விலங்கிடம் அன்பு செலுத்துவதைப் போன்று மனிதனால் வளர்க்கப்படும் நாய் மனிதனிடம் அன்புசெலுத்தும் விதத்தினை,

**யானை யனையவர் நண்பொரீஇ நாயனையர்**

**கேண்மை களிஇக் கொளல்வேண்டும்: யானை**

**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்**

**மெய்யதா வால்குழைக்கும் நாய். (நாலடியார் - 213)**

என்ற மேற்காணும் பாடல் தெளிவுபடுத்துகிறது. இங்கு யானை, தன்னைப் பாதுகாத்து வளர்த்த பாகனேயாயினும் மதம்பிடித்த காலத்தில் வளர்த்தவர் என்று அறிந்திருந்தும் அன்பின்றி பாகனையே கொல்லும். இப்படிப்பட்டவரின் நட்பினை விளக்கிவிடவேண்டும், தன்னை வளர்த்தவர் எய்த வேல் தன் உடலைத் துளைத்திருப்பினும், தனக்கு உணவுகொடுத்தவர் என்பதை எண்ணிப்பார்த்து அவர்மீது கொண்ட மிகுந்த அன்பின் காரணமாக நாயானது வாலையாட்டும். இத்தகு நாய்போன்றோரின் நட்பினை ஒருவர் பெற வேண்டும். இப்பாடலிலிருந்து நாய் மனிதன் மீது கொண்ட உயர்ந்த அன்பு வெளிப்பட்டுள்ளது. பிறரது உயிர் பிரியப்போகும் சூழலில் அவர்கள்மீது கொண்ட அன்பினால் இருவரையும் நல்வழிப்படுத்தும் புறநானூற்றுப் பாடலில்,

**ஒருவீர் தோற்பினும், தோற்பதுஉம் குடியே**

**இருவீர் வேறல்ல இயற்கையும் அன்றே: அதனால்**

**குடிப்பொருள் அன்று, நும்செய்தி கொடித்தேர்**

**நும் ஓரன்ன வேந்தர்க்கு**

**மெய்மலி உவகை செய்யும்இவ் இகலே. (புறநானுறு -45. 5-9)**

என்ற மேற்காணும் பாடலடிகளின் மூலம் சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையே பெரும்போர் ஏற்பட்டு எண்ணற்ற போர்வீரர்கள் உயிரிழக்கும் சூழல் ஏற்பட்டது. இதனை அறிந்த கோவூர்கிழார் இவ்விரு அரசர்களையும், மக்களையும் காத்தற்பொருட்டு இருவரையும் அறிவுறுத்துவதாக உங்களுள் யார் ஒருவர் தோர்ப்பினும் தோற்பது உம்முடைய சோழரது குடியே, நீங்கள் இருவருமே இப்போரில் வெல்வது நடவாத ஒன்றாகும். ஆதலால் நீங்கள் இருவரும் போர்புரிய எண்ணுவது உங்களது குடிப்பெருமைக்குச் சிறப்பும் அன்று என்று அறிவுரைகள் பல கூறிப் போரினைத் தடுத்தார். இந்நிகழ்வானது,

**அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்**

**புன்கணீர் பூச றரும். (திருக்குறள் - 71)**

அன்பினை அடைத்து வைக்கும் தாழ்பாழ் இல்லை, தம்மீது அன்புகொண்டவரின் கண்களில் உள்ள நீரே அவர் தன்மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்திவிடும் என்ற குறளுக்கு ஏற்றார் போன்று உள்ளது.

**ஈகை**

மனிதநேய பண்புகளுள் உயர்ந்த இடத்தில் உள்ளதாக ஈகைக்குணம் உள்ளது. வறியவர்க்கும், இரப்போருக்கும், துன்பப்படும் மற்ற உயிர்களுக்கும் யாதொன்றையும் எதிர்பாராமல் கொடுப்பதே ஈகை ஆகும். இதனைத் திருவள்ளுவர்,

**வரியார்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்**

**குறியெதிர்ப்ப நீர துடைத்து. (குறள்-221)**

என்ற குறளில் இக்கருத்தை விளக்கியுள்ளார். தமிழக வரலாற்றில் அன்றுமுதல் இன்றுவரை தங்களது ஈகைக்குணத்தால் பலருக்கும் கொடுத்துக் கொடுத்துப் பெயர்பெற்றவர்கள் பலர் உள்ளனர். அதன் அடிப்படையில் நீதிஇலக்கியங்களில் காணலாகும் மக்கள், பலருக்கு உணவு மற்றும் பொருட்கள் பலவற்றைக் கொடுத்து உதவினர்.

தம்மிடம் செல்வம் இல்லாதிருக்கும் காலத்திலும், இரப்போர்க்கு செல்வம் இருக்கும் காலத்தைப்போன்று தம்மிடம் உள்ள பொருளினைக் கொடுத்து உதவும் உள்ளம் படைத்தவர்க்கு மேல்உலகில் உள்ள சுர்க்க கதவுகள் அடைக்கப்படுவதில்லை எனும் கருத்தை,

**இல்லா விடத்தும் இயந்த, அளவினால்**

**உள்ள விடம்போற் பெரிதுவந்து - மெல்லக்**

**கொடையோடு பட்ட குனமுடைய மாந்தர்க்(கு)**

**அடையாவாம் ஆண்டைக் கதவு. (நாலடியார். 91)**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. மணிமேகலைக்காப்பிய தலைவி மணிமேகலையும் பசி என்னும் கொடிய பிணியைப் போக்குவதற்காக முயற்சிசெய்வதனை,

**பசியும் பிணியும் பகையும் நீங்கி**

**வசியும் வளரும் சுரக்கென வாழ்த்தி. (மணிமேகலை -1, 70-71)**

என்று பசியினைப் போக்க நினைப்பதற்கு அவருள் உள்ள ஈகைகுணமே காரணமாகும். மணிமேகலைத் தன்னிடம் உள்ள அக்சயப்பாத்திரத்தைப் பயன்படுத்தி, அனைவருக்கும் உணவினைக் கொடுத்து உதவும் உயர்ந்த பண்பாளராக திகழ்ந்தார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இதைப்போன்று சோறு முதலியவற்றை யாசகர்களுக்குப் பகுத்துக் கொடுத்தபின்பு உண்ணவேண்டும் என்பதனை,

**பரவல்மின் பற்றன்மின் பாத்துன்மின் யாதுங்**

**கரவண்மின் கைதுண்டாம் போழ்து** (நாலடியார் - 92. 3-4)

என்ற பாடலில் மனிதநேயம் கொண்டவர். தனக்கென யாதும் வைக்காது கேட்போர்க்கு கேட்டவற்றைக் கொடுக்கும் உயர் பண்பாளராக, இரவலர்களுக்குக் கர்ணனாக, பாரியாக திகழ்கிறார் எனும் கருத்தை நாலடியாரின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**கொல்லாமை**

மனிதநேய பண்புகளுள் சிறந்த பண்பு எனப்படுவது, தொல்காப்பியர் கூறிய ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்கள் யாதென்றையும் கொல்லாமையாகும். களப்பிரர் காலத்தில் தோன்றிய நீதிஇலக்கியங்களுள் கொல்லாமை குறித்த செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன,

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**

**பின்சாரப் பொய்யாமை நன்று.** (திருக்குறள் - 323)

என்ற வள்ளுவரின் கூற்றுப்படி மனிதன் கடைபிடிக்க வேண்டிய முதல் நற்செயல் கொல்லாமையாகும். அதற்கு அடுத்து பொய்கூறாமல் இருப்பது மிகவும் நன்றாகும் என்று கொல்லாமையை வளியுறுத்துகிறார். மனிதன் வேட்டையாட தொடங்கிய காலந்தொட்டே மனிதர்களால் அவனைச் சார்ந்து வாழ்கின்ற விலங்குகளுக்குத் துன்பம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உணவிற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், சமயத்தின் பெயராலும், ஊன்சுவையின் காரணமாகவும், காடுகளை அழித்து நாடாக்குவதன் மூலமாகவும் நம்மைச் சார்ந்து வாழும் விலங்குகளை மனிதன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அழித்துவருகிறான்.

மனிதர்களால் விலங்குகள் துன்புறுவதையும், விலங்குகளால் விலங்குகள் துன்புறுவதையும் கண்ட நீதியிலக்கிய காலப்பெரியோர்கள் பற்பல நற்கருத்துக்களைத் தம் நூலில் கூறியுள்ளனர். இங்கு உயிர்களிடம் இரக்கம் இன்றி உயிர்பலி புரிதல் தீமை என்பதை,

**செறலிற் கொலைபுரிந்து சேணுவப்பா ராகி**

**அறிவின் அருள்புரிந்த சொல்லார் - பிரிதின்**

**உயிர்செகுத் தூன்றுய்த் தொழுகுத லோம்பார்,**

**தயிர்சிதைத்து மற்றொன் றடல்.** (பழமொழிநானூறு - 344)

என்ற இப்பாடலில் இங்கு மற்ற உயிர்களிடத்து இரக்கம் கொண்டு மேலுலகப்பயனை அடையாமல், யாகத்தின் பெயரால் உயிர்களைக் கொன்று அதன் மாமிசத்தை உண்டு மேலுலகப்பயனை அடையப் போகிறோம் என்பவர்கள், உண்ணும் தயிரினைச் சிதைத்து உண்ணும் அறிவிலிகளாவர். என்று வேள்வியின் காரணமாகவும், விழாக்காலங்களிலும்,

ஏன் தெய்வங்களின் பெயரைச்சொல்லியும் கூட ஓர் உயிரினைக் கொலைபுரிவது தீமையாகும். என்பதை, மேற்காணும் பாடல் உணர்த்துகிறது. மேலும், விலங்கிற்கு ஏற்படும் துன்பத்தினைக் கண்டு திருமால் வந்து உதவிய செய்தியை,

**பதக முதலைவாய்ப் பட்ட களிறு**
**கதறிக் கைகூப்பி என் கண்ணா கண்ணா என்ன**
**உதவப் புள் ஊர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த**
**அதகன் வந்து அப்புச்சி காட்டுகின்றான்**
**அம்மனே அப்புச்சி காட்டுகின்றான். (பெரியாழ்வார் திருமொழி - 125, 9)**

என்ற பாடலில் கஜேந்திரன் என்ற பெயருடைய யானை தாமரைப் பூக்களைப் பறித்து திருமாலுக்குச் சூட எண்ணியது, பூப்பறிக்க குளத்தில் இறங்கியபொழுது ஊர்த்துவன் என்ற முதலை கஜேந்திரனின் காலைக் கவிகொண்டது. உடனே கஜேந்திரன் தான் பறித்த மலர்களைத் தன் துதிக்கையில் வைத்தபடி ஆதிமூலமே என்று திருமாலை அழைக்க கருட வாகனத்தில் அங்கு வந்த மகாவிஷ்ணு யானையை மீட்டார். என்ற நிகழ்விலிருந்து உயிர்களின் துன்பத்திற்கு வருந்தி உதவுபவராக மனிதர்கள் திகழவேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

### முடிவுரை

மனிதநேயம் என்ற உயரியப்பண்பு இயல்பாகவே மனிதனிடம் உள்ள ஒன்றாகும். காலம், சமூகம், கலாச்சாரம் மற்றும் தேவைகாரணமாக சிலநேரங்களில் மனிதநேயம் அற்ற மனிதனாக வாழத்தலைப்படுகிறான். இம்மனிதனை நல்வழிப்படுத்தி, அன்பு, ஈகை, கொல்லாமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும், இன்றியமையையும், பயன்களையும் விளக்கிக்கூறித் தெளிவடையச் செய்யும்பொழுது மனிதன் சிறந்த உயரிய பண்புடைய மனிதனாக வாழ்வான் என்பதை இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

### துணைநூற்பட்டியல்


1. இளங்குமரனார்,இரா, தொல்காப்பியம் - பொருளதிகாரம், பேராசிரியம், இரண்டாம் தொகுதி, தமிழ்மண் பதிப்பகம், சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை – 600017, 2003.

2. கமலக்கண்ணன்,இரா.வ, நாலாயிர திவ்யப் பிரபந்தம், மூலமும் உரையும், (முதல் தொகுதி) வர்த்தமானன் பதிப்பகம். 141, வடக்கு உஸ்மான் சாலை, ஏ.ஆர்.ஆர். காம்ளெக்ஸ் - தியாகராய நகர், சென்னை 600017. முதல் பதிப்பு - 2001

3. சுப்பிரமணியன்,சா.வே, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, (தமிழ்.தமிழ் - ஆங்கிலம்), திருவான்மியூர், சென்னை -108, 1992.

4. தேவநேயப் பாவாணர்,ஞா, திருக்குறள் தமிழ் மரபுரை (அறத்துப்பால் - 1)

(மூலமும் உரையும்) தமிழ்மண் பதிப்பகம், அகமது வணிக வளாகம், 293, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14 .1967.

5. பத்மதேவன், நாலடியார் (மூலமும் உரையும்), கற்பகம் புத்தகாலயம்,4/2, சுந்தரம்தெரு, தியாகராயநகர், சென்னை - 600017. 2008.
6. பாலசுப்பிரமணியன்,கு.வே, புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி சிட்கோ இன்டர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை 600098, - 2004.
7. மாணிக்கனார்,அ, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும், தெளிவுரையும், (நான்காம் பகுதி) பழமொழிநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர் காம்ப்ளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600017, 1991.
8. வெங்கடசாமி நாட்டார், ந.மு, மணிமேகலை (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை, 600014, 2007.
9. ஆக்ஸ்போர்டு ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், ஜேய்சிங் ரோடு, புதுதில்லி - 1.

**Reference:**

1. Ilangumaran, R - Tholkappiyam porulatikaram, tamilman patippakam, cinkaravelar teru, tiyakarayar nakar, cennai – 600017, 2003.
2. Kamalakannan, R.V. - Nalayira Divya Prabandham, varttamanan patippakam. 141, Vaṭakku usman calai, e.ar.ar. Kamleks - tiyakaraya nakar, cennai 600017. Mutal patippu - 2001.
3. Subramanian, S.V. Kriyavin tarkalat tamil akarati, (tamil.Tamil - ankilam), tiruvanmiyur, cennai -108, 1992.
4. Devaneyap phavanar, Tirukkural tamil marapurai (arattuppal - 1) (mulamum uraiyum) tamilman patippakam, akamatu vanika valakam, 293, tiru.Vi.Ka. Netuncalai, irayappettai, cennai - 14.1967.
5. Padmadevan – Naladiyar (mulamum uraiyum), karpakam puttakalayam, 4/2, cuntaramteru, tiyakarayanakar, cennai - 600017. 2008.
6. Balasubramanian, K.V. – Purananoor (mulamum uraiyum) niyucencuri puk havus (pi) lit, 41-pi citko intar intastriyal estet, ampattur cennai 600098, - 2004.
7. Manikanar, A. Patinen kiikkanakku nulkal mulamum, telivuraiyum, (nankam pakuti) palamolinanuru, varttamanan patippakam, e.ar.ar kamplaks, 141, usman calai, tiyakaraya nakar, cennai - 600017, 1991.

8. Venkatasamy Natar, N.M. – Manimegalai (mulamum uraiyum), carata patippakam, cennai, 600014, 2007.

9. Oxford English - English - Tamil Dictionary, aksportu palkalaikkalakam, jeycin rotu, pututilli - 1.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**தினேஷ்குமார் பா, மஹேஸ்வரி.பே, "நீதி இலக்கியங்களில் மனிதநேயம்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 5, சனவரி 2025, பக். 18-26

**Cite this Article in English**

**Dineshkumar B, Maheswari.P , "Humanism in Justice Literature** " Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 5, January 2025, pp. 18-26